*7*

# கிறிஸ்துவே ஞானம் அறிவு ஆகியவைகளுக்கு மூலகாரணி

## (2:1–7)

*2:1-7ல் பவுல் கொலோசெயர்களிடம் அவர்கள் உற்சாகப்படும்படியாகவும் அன்பினால் ஒன்றாகக் கட்டப்படவும், தேவனைப் பற்றிய அறிவினால் முழுமையாய் நிரப்பப்படவும் வேண்டுமென்று விரும்பினார். அவர்களுக்குத் தேவையான சகல ஆவிக்குரிய தகவல் தேவைகளும் கிறிஸ்துவுக்குள் காணமுடியும். ஆகையால், அவரிடத்தில் அவர்கள் அதிகமாய் ஈர்க்கப்படவும் அவரிடத்தில் அவர்கள் வைத்துள்ள விசுவாசத்தை விட்டு விலகிவிடாமல் இருக்கவும் வேண்டியவர்கள்.*

## பவுலின் விருப்பம்: தேவனுடைய இரகசியத்தைப் பற்றிய அவர்களின் முழுமையான புரிந்து கொள்ளல் *(2:1, 2)*

**[1]உங்களுக்காகவும் லவோதிக்கேயாவிலிருக்கிறவர்களுக்காகவும், சரீரத்தில் என் முகத்தைக் காணாதிருக்கிற மற்றெல்லாருக்காவும் மிகுந்த போராட்டம் எனக்கு உண்டென்று நீங்கள் அறிய விரும்புகிறேன். [2]அவர்களுடைய இருதயங்கள் தேற்றப்பட்டு, அவர்கள் அன்பினால் இணைக்கப்பட்டு பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய இரகசியத்தை அறிந்து கொள்ளுகிற உணர்வின் பூரண உரியவர்களாக வேண்டுமென்றே இப்படிவிரும்புகிறேன்.**

**“உங்களுக்காகவும் லவோதிக்கேயாவில் இருக்கிறவர்களுக்காகவும்” *(2:1)***

*பவுலின் நிருபத்தில் வலிமைமிக்க உணர்வுகள் வெளிப்படுத்தப்படுகின்றன.[1] பவுலை உணர்வற்றவராக, உணர்ச்சியற்றவராக, அலட்சியமுள்ளவராக பிறரிடம் நடந்து கொள்பவராய் பார்ப்பவர்கள் பவுலின் ஒட்டுமொத்த இரக்க குணமுடைய அவரது அடுத்த பக்கத்தைத் தவறாக புரிந்து கொள்கின்றனர். அதேபோல, பவுலை ஒரு போதும் சந்தித்திராத கிறிஸ்தவர்கள் அவர்களைக் குறித்தும் அவர்களின் ஆவிக்குரிய தேவைகளையும் எவ்வளவு ஆழமாக உணர்ந்திருந்தார் என்பதை அறியாதவர்களாக இருப்பர். அவர் தமது இந்தப் பக்கத்தை வெளிப்படுத்தி அதினால் அவர்களுடைய ஆவிக்குரிய நலனில் தனது ஆர்வத்தைக் காண்பித்தார்.*

*தனது ஊழியத்தில் பவுலின் எண்ணம் எதுவாக இருந்தது? தன்னால் இயன்ற வரை ஒவ்வொருவருக்காகவும் ஊழியம் செய்யும் எண்ணம் அவருக்கு*

*இருந்தது (ரோமர் 1:14, 15) - அவருக்கு பவுலால் சந்திக்கப்படாதவர்களாயினும் கூட "தனது நிருபத்தின் மூலம் அவர்களுக்குப் போதிக்க முடிந்தது" (1 கொரிந்தியர் 9:16).*

**லவோதிக்கேயாவிலிருந்த** சபைக்கு பவுல் அக்கரை கொண்டிருந்தார்,[2] அப்பட்டணம் கொலோசெயிலிருந்து பன்னிரெண்டு மைல் தொலைவில் மேற்குத் திசையில் இருந்தது. அநேக ஆண்டுகளுக்குப்பின், இந்த சபை வெது வெதுப்பான (அனலுமின்றி குளிருமின்றி இருந்த ஒரு) சபையாக, உலகப் பிரகாரமான ஐசுவரியமிக்கதாயிருந்தும் ஆவிக்குரிய ரீதியில் தரித்திரமுடைய சபையாக விவரிக்கப்படுகிறது (வெளிப்படுத்தின விசேஷம் 3:14-22). இயேசு உருவகமாகச் சொல்லி, அவர்களை தாம் வாந்தி பண்ணிப் போடவும் தயாராயிருப்பதாகக் குறிப்பிட்டார்.

### *"சரீரத்தில் என் முகத்தைக் காணாதிருக்கிற மற்றெல்லாருக்காகவும்" (2:1)*

கொலோசெயிலிருந்த எந்தக் கிறிஸ்தவனும் அவர் முகத்தை காணவில்லை என்ற பொருளில் பவுல் குறிப்பிடவில்லை. அவர் மூன்று குழுவினருக்கு கூறிக் கொண்டிருந்தார். "அவர்களினிமித்தம்" தமக்கு மிகுந்த போராட்டம் உண்டு என்று சொன்னார், அதன் பொருள் கொலோசெயில் இருந்த கிறிஸ்தவர்களினிமித்தம்; "லவோதிக்கேயாவிலிருந்தவர்கள்" நிமித்தம்; மற்றும் "(தன்) முகத்தை காணாதிருக்கிறவர்களினிமித்தமும்." இந்த மூன்றாவது கூட்டத்தில் முதல் இரண்டு கூட்டத்தில் இருந்தவர்களையும் பவுலைச் சந்தித்தே இராதவர்களையும் உட்படுத்திப் பேசியிருக்கலாம். இது உண்மையானால், சிலர் லீசியாபள்ளத்தாக்கில் அவரைப் பார்த்துள்ளனர், ஆகிலும் அதிகமான பேர் அவரைப்பார்த்ததில்லை.

என் (முகத்தை) என்ற வார்த்தை **தனிப்பட்ட முறையில்.** (இது கிரேக்கச் சொற்றொடரான *mou en sarki*), என்பதிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது (நேரடிப் பொருளில் "என் சரீரத்தில்"). ஆக (அவருடைய) **முகத்தை காணாதவர்களை** மாம்சத்தில் காணாதவர்கள். இதிலே அவர் அவருடைய உபதேசத்தை மட்டும் கேட்டவர்களுக்கும் உண்மையிலேயே அவரைக் கண்டவர்களுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை அவர் கொடுக்கிறார்.

### *"மிகுந்த போராட்டம் எனக்கு உண்டென்று நீங்கள் அறிய விரும்புகிறேன்" (2:1)*

பவுல் தனது வாக்கியத்தில் இடைவெளிகொடாமல் இந்த இடத்தில் பேசுவதால் தனது கருத்தில் இடைவெளி இல்லாதிருக்க (For) ஏனெனில் (*gar*), என்று இந்த வாக்கியம் துவங்குகிறது, அதாவது "விளக்கப்படுத்த வேண்டுமாயின்" என அர்த்தப்படுகிறது. 1:28ல் "எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாய் நிறுத்தும்படிக்கு" என்று சொல்லி தனது நோக்கத்தைச் சொன்னார். 2:2ல் குறிப்பிடப்படுகிற தனிப்பண்பை அடிப்படையாகக் கொண்டு கொலோசெயர்களும் மற்ற எல்லாரும் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் மேற்குறிப்பிட்டதை சாதிக்க முடியும். அவர்களை கிறிஸ்துவுக்குள் தேறினவர்களாய் நிறுத்துவது தனது குறிக்கோளாக இருந்த படியால், அவர்களினிமித்தம் அவருக்கு மிகுந்த போராட்டமிருந்தது

அத்துடன் லவோதிக்கேயாவிலிருந்த கிறிஸ்தவர்களினிமித்தமாகவும், பிற இடத்து கிறிஸ்தவர்களினிமித்தமாகவும் அப்படி போராட்டம் இருந்தது. 1:28லிருந்து 2:1வரை தொகுத்துப் பார்ப்பது அவைகளின் தொடர்பு விளக்கப்படுத்துவதைக் காணலாம்.

**போராட்டம்** (*agōn*)[3] எனும் வார்த்தை ஆர்வத்துடன் தொடர்ந்து பிரயாசப்படுவதை வெளிப்படுத்துகிறது. 1:29ல் குறிப்பிடுகிற "போராடுகிறேன்" எனும் வார்த்தையும் அதே அடிப்படையிலிருந்து வந்த வார்த்தைதான், இது சில வேளைகளில் பந்தய அரங்கில் இருப்பவர்கள் போராடுவதைக் குறிப்பிடுகிறது. பவுல் தனது சகக் கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய நலனுக்காக எவ்வளவாய் நேர்மையுடன் தேடுகிறார் என்பதை உதாரணமாக்குகிறது.

**"அவர்களுடைய இருதயங்கள் தேற்றப்பட்டு" (2:2)**

பவுலின் தீவிர முயற்சி என்னவெனில் மற்றவர்களை ஆவிக்குரிய ரீதியில் தூக்கி விடுவதுதான். அவருடைய அக்கரையெல்லாம் அவர்களுடைய சரீர நலன்களைக் காட்டிலும் இருதயத்தின் நிலைமைதான். **இருதயங்கள்** (*kardiai*) என்பது மனிதனுடைய உள்ளான ஜீவனின் மையமாக திருமறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. திருமறையில் ஒரே ஒரு இடத்தில் மட்டுமே இரத்தத் ஓட்டத்திற்கான உந்துதலைச் செய்யும் உந்து விசைக் கருவியாக மாமிச ரீதியில் பேசுகிறது (2 சாமுவேல் 18:14; LXX). உள்ளான மனுஷனுக்கப்பால், அது மாமிச ரீதியானமையப்பகுதியான "பூமியின் இருதயம்" போன்ற வார்த்தைகளால் பொருள்படுத்துகிறது (மத்தேயு 12:40).

மனித "இருதயத்தைப்" பற்றிக் குறிப்பிடும் போது, புதிய ஏற்பாட்டில் *kardia* எனும் பதம் புத்திக்கூர்மை, மன ரீதியான செயல், ஒருவர் சிந்தனை செய்கிற ஆவிக்குரிய மையப்பகுதி (மத்தேயு 9:4). புரிந்து கொள்ளுதல் (மத்தேயு 13:15), பகுத்தறிதல் (மாற்கு 2:6), சந்தேகங்கள் (மாற்கு 11:23), கற்பனைகள் (லூக்கா 1:51), மனதில் வைத்துக் கொள்ளுதல் (லூக்கா 2:19), ஆச்சரியப்படுதல் (லூக்கா 3:15), இச்சைகள் (ரோமர் 1:24), விசுவாசித்தல் (ரோமர் 10:10), வஞ்சிக்கப்படுதல் (ரோமர் 16:18), மற்றும் தண்டிக்கப்படுதல் (1 யோவான் 3:21) ஆகியவைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. இதில் உணர்ச்சிவசப்படுதல், அன்புகூரும் பகுதியாக ஒரு நபருக்குள் இருக்கும் தன்மையைக் குறிப்பது (மத்தேயு 22:37), துக்கப்படுத்துதல் (மாற்கு 3:5), கலங்குதல் (யோவான் 14:1), வருத்தப்படுதல் (யோவான் 16:6), சந்தோஷப்படுதல் (நடபடிகள் 2:26), வேதனைப்படுதல் (2 கொரிந்தியர் 2:4), மற்றும் உற்சாகப்படுதல் (கொலோசெயர் 4:8) ஆகியவைகளையும் உட்படுத்துகிறது. மேலும் அது மனவிருப்பம், நோக்கம் (நடபடிகள் 11:23) மற்றும் குறிக்கோள் ஆகியவைகளையும் உட்படுத்துகிறது (எபிரெயர் 4:12).

இந்த கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய வாழ்க்கையையும், இருதயங்களையும் கொண்ட மையப்பகுதியை பெலப்படுத்த விரும்பினார். சரீரப்பிரகாரமான குணங்கள் முக்கியமானதுதான், ஆகிலும் உள்ளான மனுஷனைப் போல, "இருதயத்தில் மறைந்திருக்கிற குணத்தைப் போல முக்கியமானதல்ல" (1 பேதுரு 3:4). தேவன் புறம்பான தோற்றத்தைப் பார்க்காமல் இருதயத்தைப் பார்க்கிறார்.[4] சாலெமோனின் புத்திமதி இங்கே அத்தியாவசியமானது: "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக் கொள், அதினிடத்திலிருந்து ஜீவ

ஊற்று புறப்படும்” (நீதிமொழிகள் 4:23). மனுஷன் அப்பத்தினால் மாத்திரம், அதாவது மாம்ச வாழ்க்கைக்கு அத்தியாவசமாய்த் தேவைப்படுகிற பொருளால் மாத்திரம், பிழைப்பதில்லை,தேவனுடைய வார்த்தையாகிய, இருதயத்தின் ஆவிக்குரிய போஜனத்தால் பிழைப்பான் (மத்தேயு 4:4).

**“அவர்கள் அன்பினால் இணைக்கப்பட்டு” (2:2)**

**இணைக்கப்பட்டு** எனும் வார்த்தையின் மொழிபெயர்ப்புக்கு அடிப்படை வேராக இருந்த வார்த்தை (*sumbibazō*) “ஒன்று கூட்டுதல்” (நடபடிகள் 9:22), அதாவது ஒரு கருத்தைத் திருஷ்டாந்தப்படுத்துதல், நிச்சயித்துக் கொள்ளுதல் (நடபடிகள் 16:10), போதித்தல் (1 கொரிந்தியர் 2:16), அல்லது ஜனங்களை ஒன்றிணைத்தல் (எபேசியர் 4:16; கொலோசெயர் 2:2, 19). இது பவுல் கொலோசெயரில் குறிப்பிடுகிற அன்பு (*agapē*) ஐந்து தடவைகளில் இது நான்காவது தடவையாகும் (காண்க 1:4, 8, 13 [“பிரியமான”]; 3:14).

ஜனங்களை அன்பினால் இணைப்பதற்கு முன்னுதாரணம் யோனத்தான் தாவீதிடம் கொண்டிருந்த அன்பு (1 சாமுவேல் 18:1). யோனத்தானும் தாவீதும் பகிர்ந்து கொண்ட அதே நெருக்கத்தையும் அக்கரையையும் கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் கொண்டிருக்க வேண்டியவர்கள். ஐக்கியம் நீடித்திருக்கும் அன்பையும் சகித்துக் கொண்டிருக்கும் நம்பிக்கையையும் சார்ந்திருக்கிறது.

ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனும் எனும் போதனையை இயேசு கொடுத்தார் (யோவான் 10:16). அனைத்து விசுவாசிகளின் ஐக்கியத்திற்காக அவர் ஜெபித்தார் (யோவான் 17:20, 21). கிறிஸ்தவர்கள் பிரிந்திருக்கக் கூடாது என்று பவுல் அறிவுறுத்தினார் (1 கொரிந்தியர் 1:10), மாறாக மிகுந்த மனத்தாழ்மையோடும், சாந்தத்தோடும், நீடிய பொறுமையோடும், அன்பினாலும், ஒருவரையொருவர் தாங்குவதாலும் ஐக்கியத்தைப் பராமரிக்கும்படி சொன்னார் (எபேசியர் 4:1-3). தேவன் ஐக்கியத்தை, “உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும் ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு” என்ற உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு ஐக்கியத்தை சாத்தியமாக்கினார் (எபேசியர் 4:4-6). கிறிஸ்துவை பின்பற்றுவதால் ஐக்கியம் வருகிறது, மனுஷனுடைய பாரம்பரியத்தினாலே உலகத்தின் வழிபாடுகளினாலோ வருவதில்லை (கொலோசெயர் 2:8). கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்போது மக்களை ஒன்றிணைக்கிறார் (எபேசியர் 4:13).

அனைத்து விசுவாசிகளின் ஐக்கியமே ஒவ்வொரு கிறிஸ்தவனின் இலக்காயிருக்க வேண்டும். நாம் உலகத்தாரோடோ கிறிஸ்துவிடமிருந்து வராத செயல்களையோ, எண்ணங்களையோ, ஒழுக்கசம்பந்தப்பட்ட காரியங்களையோ கொண்டிராதவர்களுடன் ஐக்கியம் கொண்டிருத்தல் கூடாது (ரோமர் 16:17; 2 கொரிந்தியர் 6:14-17).

**“பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய இரகசியத்தை அறிந்து கொள்ளுகிற உணர்வின் பூரண நிச்சயம்” (2:2)**

கிறிஸ்தவர்கள் ஒரு நிலையான புரிந்து கொள்ளுதலை கொண்டிருப்பது

அவசியம். இரகசியத்தைக் குறித்த **உண்மையான அறிவு** - இயேசுவையும் அவர் அளிக்கும் இரட்சிப்பையும் - அறிவதுதான் - தேவனுடைய வெளிப்பாட்டை புரிந்து கொள்வதன் பலன். **தேவனுடைய இரகசியம் என்பது, கிறிஸ்துவே,** என்பதில் கிரேக்க வசனப்பகுதியில் வித்தியாசப்படுகிறது, ஒரு வேளை வித்தியாசப்பட்ட முறையில் விளக்கமளிக்கலாம்:

> கிரேக்க வசனப்பகுதி நான்கு வேறுபட்ட வழிகளில் புரிந்து கொள்ளப்படக் கூடும்: (1) "தேவ இரகசியம்", அது "கிறிஸ்துவைப்" பற்றினது, இது "தேவனுக்கு எதி" ராக "கிறிஸ்து" இருக்கிறார் என்ற பொருளைக் கொடுக்கலாம். (2) "தேவனாகிய கிறிஸ்துவைக் குறித்த இரகசியம்," இதில் "கிறிஸ்துவுக்கு" முன்பாக முன்னிடை பெயரெச்சம் இல்லாததால் இது அமைவற்றதாக்குகிறது (3) "தேவன் கிறிஸ்துவைப் பற்றிய இரகசியம்" (அல்லது, "தெய்வீகக் கிறிஸ்து"), இதற்குச் சரியாக (புதிய ஏற்பாட்டில்) எதுவும் இல்லை, மேலும் (4) "தேவனுடைய இரகசியம், கிறிஸ்துவைப்" பற்றினது, என்பது "கிறிஸ்து" என்பது தேவனுடைய இரகசியம் என்பதன் முழுமையான எதிர் சொற்றொடர். இந்த கடைசி அர்த்தம்தான் அதிகமான பேர்களால் இன்றைய விளக்கவுரையாளர்கள் மற்றும் மொழிபெயர்ப்பாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.[5]

இந்த முடிவுரை H. C. G. Moule மற்றும் அநேகராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அநேக சாத்தியக்கூறுகளை விவாதித்தபின், மௌலி குறிப்பிட்டதாவது, "எனவே, 'தேவனுடைய இரகசியம், கிறிஸ்துவினுடையதும் கூட, நாம் பணிவுடன் ஏற்கிறோம்,' "[6] இயேசுவை அவருடைய போதனையிலும் ஜீவியத்தையும் கண்ணுறும்போது, முந்தைய சந்ததிகளினூடே மறைத்துவைக்கப் பட்டிருந்து இப்பொழுது வெளியாக்கப்பட்ட இரகசியமாய்க் காணுகிறது. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் அவருடைய வருகையைக் குறித்த குறிப்புகளை மட்டுமே கொடுத்தன மேலும் அவருடைய ஊழியத்தின் இயல்பையும் குறிப்பிட்டன, ஆனால் அவர் உலகத்தில் வரும் இரகசியம் என்ற திரை மூடியேதான் இருந்தது. அவருடைய வருகையினால் தேவனைப் பற்றிய உண்மையான அறிவு இயேசுவில் இப்பொழுது இருக்கிறது. "தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப் பண்ணும் பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்" (2 கொரிந்தியர் 4:6).

"இரகசியம்" *mustērion* என்பது இந்த நிருபத்தில் நான்குமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது (1:26, 27; 2:2; 4:3), ஆங்கிலத்திலிருந்து இந்த வார்த்தையின் பொருள் வித்தியாசப்படுகிறது, பொதுவாக இதன் பொருள் அந்தரங்கமானதும் குழப்பமடையச் செய்வதுமாகும், விவரிக்க இயலாதது அல்லது புரிந்து கொள்ள இயலாதது. பவுல் அதை தெய்வீக இரகசியமாக தெய்வீக வெளிப்பாட்டின் மூலமாக மட்டுமே புரிந்து கொள்ளத் தக்கதாகவும், மனித பகுத்தறிவினாலும் பிரயாசத்தினாலும் புரிந்து கொள்ள இயலாததுமான ஒரு காரியம், என்றும் இந்த வார்த்தையைப் பயன்படுத்தினார்.

கிரேக்க மற்றும் ரோம கலாச்சாரத்தில், "இரகசியம்" எனும் வார்த்தை பலதரப்பட்ட ஆன்மீக மதங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

அவர்களுடைய சடங்காச்சாரங்கள், அவர்களுடைய தேவர்களையும் தேவிகளையும் சார்ந்த கதை வடிவ அடிப்படையில், கட்டுக்கடங்கா உணர்ச்சிகரமானவைகளாக இருந்தன. இந்த சமய மரபுகள் சிக்கலான சமய சின்னங்களை கொண்டு அவர்களின் அங்கத்தினர்களாகிறவர்களுக்கு ஜாக்கிரதையாக போதிக்கப்பட்டன. உறுப்பினராவதற்கான ஆரம்பக்கட்ட தேவை அவர்களுடைய தேவர்களின் பாடு, மரணம் உயிர்த்தெழுதலை கவனித்துப் பார்த்து, அந்தப் பாடுகளில் தானும் பங்கு பெறத்தன்னை அர்ப்பணிக்க வேண்டுமென கோரப்படுகிறது. அவைகள் சமய சடங்கு ஆச்சாரியர்களால் நடத்திவைக்கப்படும், வெளியிலிருப்பவர்களுக்கு, இது அர்த்தமற்றதாய்க் காணும்; ஆகிலும், அதில் நுழைய ஆரம்பக் கட்டத்தில் இருப்பவர்களுக்கு, அந்த அநுபவம் மனதை நெகிழ வைக்கக் கூடியவைகளாகவும் இயல்பான மறுரூபத்தை அடைவதாகவும் ஒரு ஐதீகம்.

இயேசு *mustērion* எனும் வார்த்தையை வெளியாக்கப்படாததும் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டதுமான தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்த இரகசியமாகக் குறிப்பிட்டார் (மத்தேயு 13:11). கிறிஸ்து மூலமாக செயல்படுத்த நினைத்த தேவனுடைய திட்டமிடப்பட்டது பூர்வகாலங்களில் இரகசியமாக வைக்கப்பட்டு இப்பொழுது அப்போஸ்தலர்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவர் மூலமாக வெளிப்படுத்தப்பட்டது (ரோமர் 16:25; எபேசியர் 3:4, 5). மற்றவர்களோடு சேர்ந்து பவுல் இந்த வெளிப்பாட்டைப் பெற்றுக் கொண்டார் (1 கொரிந்தியர் 4:1; எபேசியர் 1:9; 3:3).

### "பூரண நிச்சயத்தினுடைய எல்லா ஐசுவரியத்திற்கும் உரியவர்களாக வேண்டுமென்றே இப்படி விரும்புகிறேன்" (2:2)

உண்மையான **ஐசுவரியம்**, என்பது பவுலின் வார்த்தைப்படி, பணத்திலோ அல்லது மாமிசப்பிரகாரமான தகுதி அடிப்படையிலோ காணப்படுவதில்லை, "ஐசுவரியம்" (*ploutos*), எனும் வார்த்தை 1:27லும் குறிப்பிடப்பட்டுள்ளது, அது **அறிந்து கொள்ளுதலில்** (*sunesis*) காணப்படுகிறது. கொலோசெயர்களுக்கு புரிந்து கொள்ளுதலையும் தேவனை அறிகிற அறிவில் நிரப்பப்படவும் பவுல் ஜெபம் பண்ணினார் (1:9, 10). பூமிக்குரிய ஐசுவரியத்தைக் காட்டிலும், கிறிஸ்தவர்கள் பரலோகத்தின் ஐசுவரியத்தையும், ஆவிக்குரிய பொக்கிஷங்களையும் நித்திய ஆசீர்வாதங்களையும் தேட வேண்டும் (மத்தேயு 6:20; 1 தீமோத்தேயு 6:19).

அறியாமை பாதுகாப்பின்மையை பிறப்பிக்கும், அதே வேளையில் அறிந்துகொள்ளுதல் நம்பிக்கையளிக்கும். தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட வசனம் அவருடைய திட்டத்தை உள்நோக்கிப் பார்க்கச் செய்து அதன் நோக்கத்தைப் புரிந்து கொள்ளச் செய்கிறது. அவருடைய வசனத்தின் அறிவு கிறிஸ்தவ வாழ்க்கையில், "இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்பு வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாயிருக்கிறது" என்ற உறுதியை அளிக்கிறது (1 தீமோத்தேயு 4:8). கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவில் கொண்டுள்ள விசுவாசத்தின் மதிப்பை அறிவார்கள். இயேசுவின் போதனையில் காணும் பொக்கிஷங்கள் அன்பினால் நாம் இணைக்கப்படவும் தேவனுடைய மனதைப் புரிந்துகொள்ளவும் உதவுகிறது.

மேலும், "அறியாமையின் இருளில்" இருக்கிறவர்கள் இரட்சிக்கப்படாத

*நிலையில் நிலைத்திருக்கிறவர்கள் (ரோமர் 10:1-3). அவர்கள் தேவனுடைய வாழ்க்கையிலிருந்து விலக்கப்பட்டவர்களாயிருக்கிறார்கள் (எபேசியர் 4:17, 18). புரிந்து கொள்ளுதல் என்பது ஒரு நபர் தேவனிடத்தில் கொண்டிருக்கும் உறவுமுறைக்கு அவசியமான ஒன்று.*

## அவரின் வெளிப்பாடு: கிறிஸ்துவுக்குள் சகல ஞானமும் அறிவும் (2:3, 4)

**3 அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது. 4 ஒருவனும் நயவசனிப்பினாலே உங்களை வஞ்சியாதபடிக்கு இதைச் சொல்லுகிறேன்.**

### "அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது" *(2:3)*

**அடங்கியிருக்கிறது** (*apokruphoi*) என்பதுதான் ஆங்கில வார்த்தைகளான "apocrypha" மற்றும் "apocryphal" லுக்கு அடிப்படையான வார்த்தை பவுல் ஆவிக்குரிய **ஞானத்தையும் பொக்கிஷத்தையும்** பற்றி எழுதுகிறார். புராதன உலகில், வங்கிகள் வருவதற்கு முன் விலை மதிப்புள்ள பொக்கிஷங்களெல்லாம் பெரும்பாலும் அவை திரும்பத் தேவைப்படும் வரை பாதுகாப்பான இடங்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. தேவனுடைய ஆவிக்குரிய பொக்கிஷங்களை கண்டு பிடிக்க, தேடுவோர் தேவனுடைய பொக்கிஷம் இயேசு கிறிஸ்துவுக்குள் எங்கே மறைத்து வைக்கப்பட்டுள்ளது என்று கண்டு பிடிக்க வேண்டும்.

தேவனுடைய சேமிப்புக் கிடங்கில் வைக்கப்பட்டுள்ள இயேசுவின் போதனைகள் அனைத்தையும் கொலோசெயர்கள் பற்றிக்கொள்ளக் கூடும் என்ற பொருளில் பவுல் எழுதவில்லை. அவர்களினிமித்தம் அவர் விரும்பியதெல்லாம் *அனைத்து* "ஞானமும்" **அறிவும்** (*gnōsis*) கிறிஸ்துவுக்குள் மறைந்திருக்கிறது, எனவே வேறு எங்கும் அதைக் கண்டு பிடிக்க இயலாது. இந்தக் காரணத்தினால், கொலோசெயர்கள் வேறு எங்கும் தேட வேண்டுவதில்லை: கிறிஸ்துவுக்கு முன்பு தேதியிட்ட போதனைகளை அவர்கள் பற்றிக் கொள்ளக் கூடாது அல்லது புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலர்கள் தீர்க்க தரிசிகள் ஆகியோரின் புதிய ஏற்பாட்டு போதனைகளுக்குப் பின்பு புனைந்த கருத்துக்களாகவும் இருக்கக் கூடாது. கிறிஸ்தவர்களின் அனைத்து தேவைகளும் இயேசுவே.

### "ஒருவனும் நய வசனிப்பினாலே உங்களை வஞ்சியாதபடிக்கு இதைச் சொல்லுகிறேன்" *(2:4)*

கொலோசெயிலிருந்த சகோதரர்கள் ஞானம் மற்றும் அறிவுக்காக வேறெங்கும் தேடவேண்டுவதில்லை என்று பவுல் உறுதியளித்தார். மேலும் அவர்களே கிறிஸ்துவின் ஸ்தாபிக்கப்பட்ட சத்தியத்தை விட்டு விலகி கவர்ச்சிகரமாய் ஆனால் வெறுமையான கருத்துக்களைப் பின் பற்றாதபடிக்கும் அவர் அவர்களை எச்சரித்தார். கிறிஸ்தவர்கள் எப்பொழுதும் கள்ளப்போதகர்கள், மனதைத் தொடும் பேச்சாளர்கள், மற்றும் உணர்ச்சிவசப்படுத்தும் நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் ஆட்கொள்ளப்படும்

ஆபத்தில் இருக்கிறார்கள். **ஒருவனும்** என்று பவுல் சொல்வதால், தனியொரு நபரை மனதில் வைத்துப் பேசவில்லை. அவருடைய விசாலமான வாக்கியங்கள் இயேசுவால் கொண்டுவரப்பட்ட செய்திக்கு முரணான போதனையை கொண்டு வருகிற எந்த ஒருவனையும் குறிக்கும். பவுல் குறிப்பிடுகையில் *எந்த ஒருவன்* வேறொரு சுவிசேஷத்தை பிரசங்கித்தாலும் சபிக்கப்படுவான் என்று சொன்னார், *"நாங்களாகிலும்" - பவுல் உட்பட, அப்போஸ்தலர்களாகிலும் -* அல்லது வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது - அப்படி பிரசங்கித்தால் சபிக்கப்பட்டவனாவான் (கலாத்தியர் 1:7, 8).

ஆரோக்கியமான உபதேசத்தைப் போலவே தங்கள் பேச்சுக்களையும் போதனைகளையும் அமைத்துக் கொண்டு பேசினால் தவறான போதனையாளர்களும் வெற்றி கொள்ளக் கூடும். கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தை உறுதியான அஸ்திபாரத்தின் மேல் சார்ந்து வைத்திருக்க முடியும், ஏனெனில் இயேசு கட்ட வேண்டிய உறுதியான சத்தியத்தை வெளிப்படுத்தினார் (மத்தேயு 7:24-27). கைக்கொள்ளும் காரியங்களும் தர்க்கங்களும் ஜனங்கள் கேட்க விரும்புகிறபடி இருப்பவை தப்பிதமாக வழிநடத்தக்கூடும் (2 தீமோத்தேயு 4:3, 4) கிறிஸ்தவர்கள் மனதைத் தொடும் போதகர்களுக்கும் போதிக்கப்படும் போதனையால் கொடுக்கும் கருத்துக்களுக்கும் அப்பால் பார்க்க வேண்டியவர்கள். பவுல் கொரிந்தியர்களுக்கு எழுதும்போது கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேன்றி, சிறந்த வசனிப்போடாவது மனித ஞானத்தோடாவது வரவில்லை என்று எழுதினார் (1 கொரிந்தியர் 2:1, 2; காண்க 1 தெசலோனிக்கேயர் 2:5).

பரிசுத்த ஆவியின் மூலமாக தனக்கு கொடுக்கப்பட்ட வெளிப்பாட்டை பிரசங்கிப்பதாலும் பாதுகாப்பதாலும், பவுல் தனது ஊழியத்தை நிறைவேற்றினார். இயேசுவே அவரை இந்த ஊழியத்துக்கு ஒரு அப்போஸ்தலனாக்கி சுவிசேஷத்தை வெளிப்படுத்தியதன் மூலம் அவரைத் தகுதிப்படுத்தினார் (கலாத்தியர் 1:11, 12). சபையில் தனக்கிருக்கிற பொறுப்பை பவுல் உணர்ந்திருந்தார் (கொலோசெயர் 1:25, 26), அதைத்தான் இப்பொழுது அவர் கொலோசெயரின் நன்மைக்காகவும் இந்த நிருபத்தை வாசிப்பவர்களின் நன்மைக்காகவும் தனது பொறுப்பை நிறைவேற்றிக் கொண்டிருந்தார்.

2:3-10ல் சொல்லப்படுகிற வார்த்தைகள் மீதமுள்ள தனது நிருபத்தில் பவுல் கொடுக்கப் போகிறவைகளின் முடிவுரையாக இருந்தன. கிறிஸ்தவர்களுக்குத் தேவையானதெல்லாம் இயேசுவும் அவருடைய போதனைகளுமே. மிகவும் கவர்ந்திழுக்கும் அவை இயேசுவாகிய ஒரே போதகரை அடிப்படையாகக் கொண்டு அமையாத பலவித போதனைகளாலே நாம் அலைகழிக்கப்பட்டு போய் விடாதபடிக்கு இருக்க வேண்டியவர்கள்.

## அவருக்குப் பிரியம்: கிறிஸ்துவில் அவர்களின் விசுவாசம் (2:5)

**5 சரீரத்தின்படி நான் தூரமாயிருந்தும், ஆவியின்படி நான் உங்களுடனே கூட இருந்து, உங்கள் ஒழுங்கையும், கிறிஸ்துவின் மேலுள்ள உங்கள் விசுவாசத்தின் உறுதியையும் பார்த்துச் சந்தோஷப்படுகிறேன்.**

***"சரீரத்தின்படி நான் தூரமாயிருந்தும் ஆவியின்படி நான் உங்களுடனே கூட இருந்து" (2:5)***

***சரீரத்தின்படி நான் தூரமாயிருந்தும்,*** *தொடர்ந்து பவுல்* ***ஆவியின்படி நான் உங்களுடனே கூட இருக்கிறேன்*** *என்றார். இந்த வாக்கியத்தின் மூலம் பவுல் குறிப்பிட்ட பொருள் என்ன?*

*ஒரு தகப்பன் வீட்டை விட்டுப் போகிற தன் குமாரனுடன் இருப்பதாகச் சொல்லுவது போன்றதா பவுல் கொலோசெயருடன் இருப்பேன் என்று சொன்னது? அந்தத் தகப்பன், "மகனே, நான் சரீரத்திலே நேரடியாக இராமல் போனாலும், ஆவியிலே நான் உன்னோடு கூட இருப்பேன்," என்று சொல்லக்கூடும். இதற்கு ஒப்பான வாக்கியத்தை பவுல் பிரிதொரு இடத்தில் சொல்லியிருக்கிறார்: "சகோதரரே, நாங்கள் இருதயத்தின்படி உங்களோடிருந்து, சரீரத்தின்படி கொஞ்சக்காலம் உங்களை விட்டுப் பிரிந்திருந்தபடியினாலே உங்களை முகத்தைப் பார்க்க வேண்டுமென்று, மிகுந்த ஆசையோடே அதிகமாய் பிரயத்தனம் பண்ணினோம்" (1 தெசலோனிக்கேயர் 2:17). இந்த வார்த்தைகளாலே, சகோதரர்களைக் குறித்த உள்நோக்கிக் காணும் தெய்வீக சக்தி தனக்கு இருப்பதாக பொருள்படுத்தி அவர் சொல்லவில்லை, மாறாக அவை அவர்களுடனே தான் கொண்டுள்ள அன்பினிமித்தம் கூட இருப்பதாக குறிப்பிடுகிறது.*

*எப்பாபிராவின் செய்தியினிமித்தம் அவர் ஆவியிலே அவர்களோடே கூட இருந்தாரா (1:7, 8)? கொரிந்தியர்களைக் குறித்த தகவலை பவுல் குலோவியாளின் வீட்டார் மூலம் கேட்டறிந்தார் (1 கொரிந்தியர் 1:11). அவர்களிடத்திலிருந்து வந்த கடிதத்தின் மூலம் அறிந்து கொண்டார் (1 கொரிந்தியர் 7:1), மேலும் வேறு சில தகவல்கள் மூலமும் தெரிந்து கொண்டார் (1 கொரிந்தியர் 4:18; 5:1; 11:18; 15:12; 2 கொரிந்தியர் 7:7; 10:10). மேலும் மற்ற உள்ளூர் சபைகளைக் குறித்தும் பல்வேறுபட்ட தகவல்களை அவர் பெற்றார் (ரோமர் 1:8; 1 தெசலோனிக்கேயர் 1:8; 3:6). அப்படிப்பட்ட தகவல்கள் ஆவியில் அந்தந்த அங்கத்தினர்களுடனே கூட இருக்கிற உணர்வை அவர் பெறும்படி செய்ததா?*

*தேவன் அப்போஸ்தலர்களுக்கு நேரடியாக கொலோசெயரின் வாழ்க்கையை ஊடுருவி பார்க்கத்தக்கதாக நேரடி கிரியை செய்தாரா? மேற்குறித்த இரண்டு சாத்தியக் கூறுகளில் ஏதாவது ஒன்றை பவுல் குறிப்பிட்டிருந்தால், பிறகு அவர் ஏன், "உங்கள் ஒழுங்கையும், கிறிஸ்துவின் மேலுள்ள உங்கள் விசுவாசத்தின் உறுதியையும் பார்த்து சந்தோஷப்படுகிறேன்" என்று சொல்ல வேண்டும் (வசனம் 5)? இரண்டாவதாகச் சொன்னதை அவர் குறிப்பிட்டிருந்தால், பிறகு அவர் தமது ஆவியிலே தேவனுடைய உதவியால் புரிந்து கொண்டு, அது அவர்களுடைய ஆவிக்குரிய செயல்பாடுகளைக் குறித்து விழிப்புணர்வைக் கொடுத்திருக்கக் கூடும்.*

*வேறே வசனப்பகுதிகளில் பவுல் தெய்வீக தகவல்களைப் பெற்றுக் கொண்டதாகக் குறிப்பிடக் கூடும் (கலாத்தியர் 1:6; 6:12; பிலிப்பியர் 4:2). 1 கொரிந்தியர் 5:3ல் அவர் சொன்னார், "நான் சரீரத்தினாலே உங்களுக்குத் தூரமாயிருந்தும், ஆவியினாலே உங்களோடேகூட இருக்கிறவனாய், இப்படிச் செய்தவனைக் குறித்து நான் கூட இருக்கிறது போல." இந்த வசனப்பகுதி தன்னில் தானே விளக்கமளித்து, பவுல் தன்னுடைய ஆவியில்,*

*கொரிந்தியர்களின் செயல்பாடுகளை அறிந்திருந்தார் என்று சொல்லுகிறது. அவர் ஒரு தடைசெய்யப்பட்ட நெருங்கின உறவினருடன் உடல் உறவு கொண்ட, தன் தாயுடன் உறவு கொண்ட, மகனைக்குறித்தத் தீர்ப்பைக் கொடுக்க திராணியுள்ளவராயிருந்தார் ஏனெனில், தனது ஆவியினால், அவர்களுடைய உறவை அறிந்து கொண்டிருந்தார்.*

***"உங்கள் ஒழுங்கையும், கிறிஸ்துவின் மேலுள்ள உங்கள் விசுவாசத்தின் உறுதியையும் பார்த்து சந்தோஷப்படுகிறேன்" (2:5)***

*பவுல் எப்படி தன் தகவல்களை அறிந்து கொண்டிருந்த போதிலும், தனது வாசகர்களிடம் அவர் (அவர்களின்)* ***ஒழுங்கையும்,*** *கிறிஸ்துவின் மேலுள்ள (அவர்களின்)* ***விசுவாசத்தின் உறுதியையும் பார்த்து சந்தோஷப்பட்டார்,*** *தனது ஆவியினாலே கண்ட அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த நல்ல வாழ்க்கைகள் அவருக்குச் சந்தோஷத்தைக் கொண்டு வந்தது. அப்போஸ்தலனாகிய யோவான் விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களின் வாழ்க்கை சந்தோஷப்படுவதற்கு காரணமாயிருந்ததைக் கண்டார். "என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்ற நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை," என்று அவர் சொன்னார் (3 யோவான் 4; காண்க 2 யோவான் 4). தேவனுடைய போதகர் கிறிஸ்தவர்கள் தேவபக்தியும் நீதியுமுள்ள வாழ்க்கையை வாழ்வதைப் பார்த்து சந்தோஷத்தால் நிரப்பப்படுவார். கிறிஸ்துவின் உண்மை ஊழியர்கள் தங்களுடைய பிரயாசத்தின் சாதகமான விளைவைக் காணும் போது சந்தோஷமடைவார்கள்.*

*கொலோசெயிலிருந்த கிறிஸ்தவர்கள் தங்களின் கிறிஸ்துவில் கொண்டிருந்த விசுவாசத்தில் "நல்ல ஒழுங்கைக்" கொண்டிருந்ததை* (*taxis*) *யும் "உறுதியுள்ளவர்களாயிருந்ததையும்"* (*stereōma*) *பவுல் பார்த்தார்.* Robert G. Bratcher *மற்றும்* Eugene A. Nida *ஆகியோர் இந்த இரண்டு வார்த்தைகளையும் குறித்து எழுதியதாவது, "Taxis என்பது ஒரு ராணுவப் பதம், அதன் பொருள் 'முறையான நிலைகள்,' 'அணிவரிசைகள்' என்பன; stereoma என்றால் 'உறுதிப்பட்டிருத்தல்,' 'ஸ்திரப்பட்டிருத்தல்' என்பன, மேலும் இராணுவப்பதத்திலும் பயன்படுத்தப்பட்டது."[7] இராணுவநிலை ஒழுங்குக்குப் புறம்பே, இந்த வார்த்தைகள் ஆசாரிய முறைமையையும் குறிக்கும் (லூக்கா 1:8; எபிரெயர் 5:6) அல்லது நடபடிகள் 3:7ல் குறிப்பிட்டபடி, சரீரப்பிரகாரமாக பெலப்படுத்தப்படும் வாழ்க்கை.*

*கொரிந்தியர்களுக்கு அவர் கொடுத்த போதனையில், பவுல் taxis எனும் வார்த்தையைப் பயன்படுத்தி கிறிஸ்தவ கூட்டங்களில் ஒரே வேளையில் இரண்டு செயல்கள் நடப்பிக்கப்பட இயலாது என்று குறிப்பிட்டார். இது கிரமம் கெட்டுப்போக ஏதுவாக்கும். மாறாக, தொழுகையின் பாகங்களெல்லாம் அடுத்தடுத்து வருகிற மற்றும் "ஒழுக்கமாயும் கிரமமாயும்" செய்யப்பட வேண்டும் (1 கொரிந்தியர் 14:40, இது வசனங்கள் 27, 31 ஆகியவற்றுடன் தொடர்புடையது). பிரசங்கியார் பேசிக் கொண்டிருக்கும் போது பாடுவது குழப்பத்தை உண்டாக்கும். கர்த்தருடைய பந்தியில் பங்குபெற்றுக்கொண்டிருக்கும் போது பாடுவது இடைஞ்சலை ஏற்படுத்தி தியானத்துடன் பங்கு பெற தடையாயிருக்கும். தொழுகையில் செய்யப்படும்*

ஒரு செயல் மற்றொரு செயலுடன் முரண்படுவது *taxis* "ஒழுக்கமானதாய்" இராது.

பவுல் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை ஒழுக்கத்தாலும், கட்டுப்பாட்டாலும், பலத்தாலும் நிரப்பப்பட்டிருக்க வேண்டுமென விரும்புகிறார். அவர் தன்னுடைய சொந்த வாழ்க்கையில் பெலப்பட வேண்டும் என்று விரும்புவது போலவே, அவர்களும் பெலப்படுத்தப்படுவதை விரும்பினார். அவர், "மற்றவர்களுக்குப் பிரங்கிக்கிற நான் தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்" (1 கொரிந்தியர் 9:27), என்று எழுதினார்.

விசுவாசத்திற்கு ஒரு அடிப்படை இருக்க வேண்டும். அது போதனைகளிலும், மற்றவர்களிடத்திலும், அல்லது உலகப் பொருட்களிலும் இடம் வகிக்கச் செய்யலாம், கிறிஸ்தவ விசுவாசம் இயேசுவில் வைக்கப்பட்டுள்ளது - உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களுக்காக மட்டுமல்ல (மத்தேயு 6:33), ஆனால் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காகவும் கூடத்தான் (எபேசியர் 1:3). கிறிஸ்தவ வாழ்க்கை என்பது அவரில் வைக்கும் விசுவாசத்தில் துவங்குகிறது, அவரில் வைக்கும் விசுவாசம் தொடர்ந்து நிலைத்திருக்கச் செய்கிறது, மேலும் அவரிலுள்ள விசுவாசத்தின் மூலம் அதன் இலக்கை எட்டுகிறது (ரோமர் 1:17). அவரே வாழ்வின் மையமும் கிறிஸ்தவர்களின் நம்பிக்கையுமாயிருக்கிறார் (யோவான் 14:6); வேறொருவரிலும் இரட்சிப்பு இல்லை (நடபடிகள் 4:11, 12).

கொலோசெயர்களின் ஜீவியத்தைக் குறித்து அவர் அறிந்து கொண்டவைகளாலே, அவர்கள் நல்லதே செய்கிறார்களென்றும் உண்மையான விசுவாசத்தைக் கொண்டிருந்தனர் என்றும் பவுல் அறிந்து கொண்டிருந்தார். இந்த உண்மை அவர்கள் உலக வழிபாடுகளினால் மோசம் போவதிலிருந்தும், சடங்காச்சாரங்களுக்கும் மனுஷ தத்துவங்கள் அல்லது நயவசனிப்புகளுக்கும் எச்சரிக்காமல் இருக்க விடவில்லை. சிலர் மனுஷருடைய தனித்தன்மையைப் பார்த்து சத்தியத்தைவிட அதிகமாய் ஆட்கொள்ளப்பட்டு விடுகின்றனர். உண்மையான விசுவாசம் பாதுகாக்கப்பட வேண்டும், ஏனெனில் அது தொடர்ச்சியான அறைகூவலாயிருக்கிறது.

கொலோசெயர்களின் ஆவிக்குரிய நலன்களை குறித்தும் அல்லது அவர்களை உற்சாகப்படுத்தவும் பவுல் சரீரப் பிரகாரமாக அவர்களோடு இருக்க வேண்டுவதில்லை. அவருடைய ஆவியிலே அவர்களுடைய ஆவிக்குரிய தேவைகளை பரிசீலிக்கவும் அவர் அவர்களோடே கூட இல்லா விட்டாலும் அவைகளை நிறைவேற்றவே வகை தேடினார்.

## அவருடைய அறிவுரை: அவரை ஏற்றுக் கொண்டபடியே அவருக்குள் நடந்து கொள்ளவும் (2:6)

**6 ஆகையால் நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக் கொண்ட படியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்து கொண்டு.**

**"ஆகையால் நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்ட படியே" (2:6)**

ஆகையால் (*oun*) என்பது இந்த சிந்தனையை ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் கிறிஸ்துவுக்குள் அடங்கியிருக்கிறது என்று சொன்ன வாக்கியத்துடன் இணைக்கிறது (வசனம் 3). இந்தப் பொக்கிஷங்களெல்லாம் அவர்களினிமித்தம் கிறிஸ்துவுக்குள் இருந்தது என்பதை அறிந்து, கொலோசெயர்கள் அவரை மட்டுமே பற்றிக் கொண்டிருக்கவும் அவர்கள் தங்கள் வாழ்க்கையை அவருடைய கட்டளைகளின் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளவும் வேண்டியவர்களாயிருந்தார்கள். அவர்கள் அவரை சகல சத்தியத்தின் ஊற்றுக்காரணராகவும் மற்றும் அவரை கர்த்தரும் மேசியாகவும் ஏற்றுக் கொண்டிருந்தனர், ஆனால் கிறிஸ்து இயேசுவை ஏற்றுக் கொள்வது மாத்திரம் நாம் தேவனுக்குக் கீழ்ப்படிதலில் முடிவாகிவிடாது. மாறாக, அதுதான் கிறிஸ்தவ நடக்கையின் ஆரம்பம், கிறிஸ்தவ ஜீவியத்தின் பெருக்கம் அதன் துவக்கத்திலிருந்தபடியே நிலைத்திருக்க வேண்டும்.

கொலோசெயர்கள் இயேசுவை கிறிஸ்து மற்றும் கர்த்தர் என்று ஏற்றுக் கொண்டிருந்தார்கள்; அவர்கள் அவர் அனைத்து ஆவிக்குரிய ஞானமாகவும் சிறந்த குணம் கொண்ட சத்தியமாகவும் ஏற்றுக் கொண்டிருந்தனர். கிறிஸ்துவாக தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட ஆளுனராகவும் வானத்தையும் பூமியையும் இப்போது அவரே ஆட்சி செய்கிறவராகவும் இருக்கிறார் (மத்தேயு 28:18). இயேசுவாக ("தேவன் இரட்சிக்கிறார்" எனும் பொருளில்; காண்க மத்தேயு 1:21), அவரைக் கொண்டே தேவன் பாவங்களை மன்னிக்கிறார். கர்த்தராக (ரோமர் 10:9), அவர் ஒரே கர்த்தராக இருக்கிறார் (எபேசியர் 4:5). அவர் (நம்மால்) கீழ்ப்படியத்தக்கவர் (லூக்கா 6:46). அவருடைய சித்தத்திற்கு எதிர்த்து நிற்பவர்களெல்லாம் பாவத்திற்கு அடிமைகள், அவர்கள் "நிர்மூலமாவார்கள்" (நடபடிகள் 3:23). அவர்கள் சுவிசேஷத்துக்கு இருதயத்திலிருந்து மனப்பூர்வமாய் கீழ்ப்படிந்ததினாலே, கொலோசெயர்கள் நீதிக்கு அடிமைகளானார்கள் (ரோமர் 6:17, 18).

புதிய ஜீவனுக்குள் அவர்கள் மாற்றப்பட்ட நிகழ்ச்சி ஞானஸ்நானத்திலே நடைபெற்றது, அது இயேசுவோடு கூட அவருடைய அடக்கம் பண்ணுதலிலும் உயிர்த்தெழுதலிலும் பங்குள்ளவர்களானதன்மூலம் இயேசுவை ஏற்றுக் கொண்டனர் (ரோமர் 6:4). இயேசுவோடு கூட அவர்கள் எழுப்பப்பட்ட பின் (கொலோசெயர் 2:12), அவருடனான அவர்களின் ஐக்கியம் தொடரவும் பாவத்துடனான அவர்களின் பங்கு ஒழிக்கப்படவும் வேண்டும் (ரோமர் 6:5, 6).

கிரேக்க வினைச் சொல்லாகிய *paralambanō* ("பெற்றுக்கொள்வது" [ஏற்றுக்கொள்வது]) என்பது பொதுவாக மற்றொருவர் கரங்களால் கொடுக்கப்படுவதைப் பெற்றுக் கொள்வது என்று பொருள்.[8] எப்பாபிராவினால் கொண்டுவரப்பட்ட செய்தியின் மூலம் கொலோசெயர்கள் இயேசுவைப் பெற்றுக்கொண்டார்கள். இதன் விளைவாக அவர்கள் இயேசு கிறிஸ்துவுக்குள் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும். அவர் அவர்களுடைய துவக்கமும் அவர்களுடைய வாழ்வின் மையமுமான கருத்தாவார். அவருடைய கட்டளைகளை கைக்கொள்வதன் மூலம் அவருக்குள் நிலைத்திருப்பார்கள் (1 யோவான் 2:3). அவர்களுடைய நடக்கைகள் அவரோடே கூட இருப்பது

*மாத்திரமல்ல அவருக்குள்ளும் இருந்தது. அவர்களின் நடக்கைக்கு அவர் அளவையை அமைத்தார் கிறிஸ்தவ நடக்கை அவரோடே கூட இருப்பதுதான், அவருக்குப் புறம்பே அல்ல.*

*ஒருவகையில், பவுல் மூலமாக, ஆவியானவர் பின்னதாக மறையியல் ஞானிகள் என்று சொல்லிக் கொள்வோரின் தவறான நம்பிக்கைக்குப் பதிலளிக்க மதிப்புமிகு செய்தி ஒன்றை அளித்தார்.* A. T. Robertson *சொன்னதாவது,*

> *அவரே எல்லாக் கர்த்தத்துவத்துக்கும், அதிகாரங்களுக்கும் மேலானவர் (எபேசியர் 1:21). செரின்தியன் மறையியல் ஞானிகள் என்போர் முதலாம் நூற்றாண்டின் இறுதியில் மனுஷனாகிய இயேசுவுக்கும், aeon கிறிஸ்துவுக்கும் இடையேயான கூர்மையான வித்தியாசத்தைக் கொண்டு வந்தனர், கொலோசெயில் இந்த உபதேசத்தின் முன்னோட்டம் காணப்பட்டிருக்க வேண்டும். இந்தக் கருத்து இயேசுவுக்கும் கிறிஸ்துவுக்குமிடையேயான வெறும் அடையாளமட்டுமல்ல என பவுல் இங்கே வலியுறுத்துகிறார், மேசியாத்துவத்தை நேரடியாக மனது ஏற்றுக் கொண்டுள்ளதா இல்லையா என்பதுதான். பவுலைப் பொறுத்தமட்டில் கட்டுக்கதையாகப் புனையபட்ட கிறிஸ்துவோ அல்லது வரலாறற்ற இயேசுவோ அல்ல. மக்கள் இயேசுவை வரலாற்று ரீதியாக ஏற்றுக் கொண்டு அவரது தெய்வீகத்தையும் ஒப்புக் கொண்டுள்ளனர்.*[9]

*வசனங்கள் 6, 7ல் ஐந்து உருவகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. (1) இயேசுவில் "நடக்க" வேண்டும் என்ற அறிவுரை, இயேசுவே வழிப்பாதையாக இருக்கிறார் என்று சுட்டிக் காட்டுகிறது. (2) "வேர் கொண்டபடியே" என்பது ஒரு செடியானது அதன் போஷிப்பிற்கும் பெலத்திற்கும் அதன் வேர்களை விடுவது போன்றது. (3) "கட்டப்படவும்" என்பது நன்கு கட்டமைப்பு பெற்ற பலமான கட்டிடத்தைக் குறிக்கிறது. (4) "உறுதிப் படவும்" என்பது அவர்கள் விசுவாசத்தில் நிலைத்திருந்தார்கள் என்று அர்த்தப்படுகிறது. (5) "போதிக்கப்படுதல்" என்பது இதற்கு முன்பு சொல்லப்பட்ட நான்கு செயல்பாடுகளையும் செயல்படுத்த தேவையான தகவல்களை பெற்றிருந்ததை வெளிப்படுத்துகிறது.*

*சுருங்கச் சொன்னால், பவுலின் அறிவுரையெல்லாம் ...*

> *"இயேசுவை ஏற்றுக் கொண்டபடியே ... அவருக்குள் நடந்து கொள்ளுங்கள்" (வசனம் 6).*
>
> *வேர்கொண்டவர்களாய்க் "கட்டப்படுங்கள்" (வசனம் 6).*
>
> *"நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்படுங்கள்" (வசனம் 7) என்பவைகளே.*

### *"அவருக்குள் நடந்து கொண்டு" (2:6)*

***நடந்து கொண்டு*** (*peripateō*) *என்பது இயேசு கடற்கரை வழியாக நடந்து சென்ற சரீர இயக்கத்தைக் குறிப்பிடுகிறது (மத்தேயு 4:18). ஆவிக்குரிய பொருளில், "நடந்து கொண்டு" என்பது ஒரு குறிப்பிட்ட ரீதியில்*

*முன்னேறிச்செல்வது. இருளிலும் நடக்கக் கூடும் (யோவான் 8:12), பகலிலோ இரவிலோ (யோவான் 11:9, 10), வெளிச்சத்திலோ (யோவான் 12:35), புதிதான ஜீவனிலோ (ரோமர் 6:4), மாம்சத்தின்படி (ரோமர் 8:4), விசுவாசத்தினாலே (2 கொரிந்தியர் 5:7), ஆவியிலே (கலாத்தியர் 5:16), பாவத்திலே (எபேசியர் 2:1, 2), நற்கிரியைகளிலே (எபேசியர் 2:10), அன்பிலே (எபேசியர் 5:2), ஒழுங்கற்று (2 தெசலோனிக்கேயர் 3:11) மற்றும் சத்தியத்திலே நடந்து கொள்ளுதல் (2 யோவான் 4). பவுல் இந்த நிருபத்தில் "நடந்து கொள்ளுதல்" எனும் வார்த்தையை நான்கு முறை பயன்படுத்துகிறார் (1:10; 2:6; 3:7; 4:5;* KJV*) அவை கிறிஸ்தவ ஜீவியத்தில் இயங்க வேண்டிய முறையைக் குறிப்பிடுகிறது. கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருத்தல் பற்றியும் (1 கொரிந்தியர் 16:13) கிறிஸ்துவுக்குள் சோம்பலாய் அமர்ந்திராமல், உறுதியாய் தொடர்ந்து நடக்க வேண்டிய அவசியமும் சொல்லப்படுகிறது.*

*கொலோசெயர்கள் அவரை ஏற்றுக் கொண்டபோது கொண்டிருந்த அதே நம்பிக்கையோடும் உறுதியோடும் இயேசுவிலே வாழ வேண்டியவர்கள், அவர்கள் அவருக்குட்பட்டிருந்தால் மட்டுமே அவருக்குள் அவர்கள் நடக்க இயலும். அவரில் கொண்டிருந்த விசுவாசத்தினாலே, இயேசுவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்ட ஞானஸ்நானத்தின் போது, அவருக்குள்ளானார்கள் (ரோமர் 6:3, 4; கலாத்தியர் 3:26, 27). ஒருமுறை அவருக்குள்ளாகும் போது, அவரைப் போலவே இவர்களும் நடந்து கொள்ள வேண்டும் (1 யோவான் 1:6).*

## *அவருடைய ஊக்கமளிப்பு: கிறிஸ்துவில் கட்டப்பட்டிருத்தல் (2:6, 7)*

***6ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக் கொண்டபடியே, அவருக்குள் வேர் கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்து கொண்டு, 7நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக.***

***"அவருக்குள் வேர் கொண்டவர்களாகவும்" (2:7)***

*கிறிஸ்தவர்களின் தேவையை விளக்கப்படுத்த மூன்று எச்சவினைச் சொற்களை அவர் பயன்படுத்தினார்:* ***வேர் கொண்டவர்களாய்,*** *"கட்டப்பட்டவர்களாய்," மற்றும் "உறுதிப்பட்டவர்களாய்."*

*"வேர் கொண்டவர்களாய்" (errizōmenoi, என்பது hrizoō விலிருந்து) என்பதன் பொருள் "வேர்ப்பிடிக்கச் செய்தல்." உறுதிப்பட நிலைப்படுத்துதல் எனும் இந்த வார்த்தை மிக அதிகமாக அடிக்கடி உருவகமாகப் பேசும் வார்த்தை. இது புதிய ஏற்பாட்டில் இங்கேயும் எபேசியர் 3:17லும் மட்டுமே காணப்படுகிறது. இது ஒரு நிறைவான செயப்படுபொருள் வினை எச்சம், "வேர்கொண்டவர்களாய்" என்பது கடந்த கால செயல் முற்று பெற்றதுடன் தொடர்ந்து நிகழும் பலன். இயேசுவை ஏற்றுக் கொண்டு அவருக்குள்ளாவதால் பவுலின் வாசகர்கள் அவருக்குள் வேர் கொண்டவர்களாகிறார்கள். இயேசுவோடு கூட இந்த நட்புறவை தொடர்வதன் மூலம், அவர்கள் எப்பொழுதும் அவருக்குள் வேர் கொண்டவர்களாகவே நிலைத்திருப்பார்கள்.*

*பெரும்பாலான செடிகளுக்கு இரண்டு காரியங்கள் தேவை அதினால் அவை வளர்ந்து வேரூன்றி உறுதியாய் நிலைநிற்கும். முதலாவதாக, அவை நல்ல மண்ணில் அவைகளின் வேர்களைப் பதிய வைக்க வேண்டும். வேர்பிடித்தல் உறுதிப்படுதலையும் வளர்ச்சியையும் கொடுக்கிறது. இரண்டாவதாக, அவை அந்த மண்ணிலே இருக்கிற வாழ்வாதாரங்களைக் கொண்டு வளர வேண்டும். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவிலே ஆழமாய் வேர்விட வேண்டும் அதினாலே அவர்கள் அவருக்குள் காணுகிற ஆதாரங்களால் வளர முடியும். நாம் இயேசுவுக்குள் பலமாய் நாட்டப்படுவோமாகில். நாம் அவ்வளவு சுலபமாக பிடுங்கப்பட்டு விட மாட்டோம். கொலோசெயர்கள் தங்கள் ஓட்டத்தில் திசைமாறிபோய் விடவில்லை என்றாலும், பவுல் அவர்கள் தொடர்ந்து அவர்கள் துவங்கின வாழ்க்கையிலே வளரும்படி விரும்பினார்.*

***"அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும்" (2:6)***

***கட்டப்படுதல்*** (*epoikodomoumenoi*) *என்பது ஒரு கட்டமைப்பையும், குறிப்பிட்ட தகுதியாம்ஸங்களை விருத்தி செய்து கொள்ளுதலையும், அல்லது ஒரு காரியத்தை பின்பற்றும் ஜனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பிற்கு உதவுவதையும் குறிப்பிடுகிறது. பவுல் இந்தப் பதத்தை மற்றொருவருடைய ஊழியத்தின் மேல் கட்டப்படுவதைக் குறிப்பது போலப்பயன்படுத்தி ஒரு கூட்டு முயற்சியைக் குறிப்பிடுகிறார் (1 கொரிந்தியர் 3:10-14). உருவகமாக, எபேசியர் 2:20 ன்படி, மற்றவர்களை இயேசுவின் சபையிலே ஒரு அங்கமாக்க கொண்டு வருவதைக் குறிக்கிறது. பேதுரு இதே போன்ற வார்த்தைகளால் ஆவிக்குரிய கட்டமைப்பிற்குப் பயன்படுத்தினார் (1 பேதுரு 2:5), மேலும் யூதா இதை விசுவாசத்தில் பெருகுவதற்குக் குறிப்பிட்டார் (யூதா 20).*

*நிகழ்கால வினையெச்சமாக "கட்டப்பட்டவர்களாய்" என்பது தொடர் செயலைக் குறிப்பிடுகிறது. கொலோசெயர்கள் உறுதிப்படவேர் கொண்டு தொடர்ந்து உறுதிப்பட்டு வேர் கொண்டவர்களாயிருக்க வேண்டும். இதன் அஸ்திபாரத்தில் அவர்கள் தொடர்ந்து இயேசுவுக்குள் "கட்டப்பட்டவர்களாவார்கள்."*

*கிறிஸ்தவர்களெல்லாரும் தேவனுடைய கட்டிடமாயிருக்கிறார்கள், அவர்கள் அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் ஆகிய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்கள், மேலும் இயேசு தாமே, அதன் மூலைக் கல்லாயிருக்கிறார் (1 கொரிந்தியர் 3:9, 11; எபேசியர் 2:20, 21). தலையாகிய, இயேசுவால் அளிக்கப்படுகிறவைகள் மூலமாக, அங்கத்தினர்களைக் கொண்டு, சபையானது கட்டப்படுகிறது (எபேசியர் 4:12, 16; 1 தெசலோனிக்கேயர் 5:11; 1 பேதுரு 2:5). வளர்ந்தேற ஏதுவாக, கிறிஸ்தவர்கள் அவருக்குள் நிலைத்திருக்க வேண்டும் மற்றும் அவருக்குள் காணப்படுகிற அறிவிலே நிலைத்திருக்க வேண்டும் (கொலோசெயர் 3:10). கிறிஸ்துவினிடத்தில் கொண்டுள்ள மெய்ப்பற்றும் அவரோடு கொண்டுள்ள நெருங்கின உறவுமுறையும் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அவசியமானவைகள்.* ***அவருக்குள்*** *என்பது ஆவிக்குரிய ஜீவியத்தின் மூலகாரணியாகவும் சகோதரர்களை விசுவாசத்திலே உறுதியாய் தரித்திருக்கச் செய்கிற நூல் கயிறாகவும் இருப்பதாகக் கூறும் ஒரு கருத்து. அவருக்குள் நாம் கட்டப்படுவோமாகில், அவருடைய பெலத்தை நாம் கொண்டிருப்போம் அவ்வளவு எளிதாக நாம் கீழே தள்ளப்படவோ அல்லது ஆவிக்குரிய ரீதியில்*

*அழிக்கப்படவோ மாட்டோம்.*

*ஆவிக்குரிய விருத்தி இயேசுவிடமிருந்து வருவதால், வேறு வகையில் பெருக ஏதுவானவர்களாக கட்டப்பட எதிர் நோக்க வேண்டுவதில்லை. அவர்கள் யாருக்குள் நாட்டப்பட்டார்களோ அவருக்குள் தங்கள் வளர்ச்சியைத் தேட வேண்டியவர்கள். கிறிஸ்துவுக்குள் வேர் கொண்டிருப்பது என்பது அவர்களுடைய வளர்ச்சியும் அவரிடத்திலிருந்துதான் வர வேண்டும் என்று பொருள். அவர்கள் இயேசுவை அஸ்திபாரமாகக் கொண்டு கட்டப்பட்டிருப்பதால், அவர்கள் ஸ்திரத் தன்மையைப் பெற்றவர்களாக, அந்த அஸ்திபாரத்தையே மீண்டும் மீண்டும் போட வேண்டிய அவசியமில்லை (எபிரெயர் 6:1).*

*ஆவிக்குரிய வளர்ச்சியைப் பெருகப் பண்ண வேறு வழி எதுவுமிருக்கிறதா? சபைச் சடங்காச்சாரங்கள் மற்றும் பரிசுத்த ஆவியை சம்பந்தப்படுத்தி வெளியிடப்படும் உணர்ச்சி வசப்படுகிற ஆசாரங்கள் எல்லாம் கிறிஸ்துவுக்குள் வளரச் செய்யும் வழிகளல்ல, இந்த வகையில் ஆவிக்குரியவைகளைப் பெறத்தேடுவோர் இயேசு தான் சகல ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் ஊற்றும் காரணமுமாய் இருக்கிறார் என்பதை உணரத் தவறுகிறார்கள்.*

***"நீங்கள் போதிக்கப்பட்ட படியே விசுவாசத்தில் உறுதிப்பட்டு" (2:7)***

***உறுதிப்பட்டு*** (*bebaioumenoi*) *என்பதன் முதன்மைப் பொருள் "ஒரு சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபிக்கப்படுதல்." அப்படிப்பட்ட உறுதிப்பாட்டுக்கு ஒரு உதாரணம் பண்ணப்பட்ட பிரசங்கவசனங்கள் உறுதிப்படுத்தப்பட்டது (மாற்கு 16:20). பிதாக்களுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தங்கள் உறுதியாக்கப்பட்டன (ரோமர் 15:8). மற்றும் கிறிஸ்துவைக் குறித்த சாட்சியம் உறுதிப்படுத்தப்பட்டது (1 கொரிந்தியர் 1:6). பவுலின் உண்மையான அப்போஸ்தலத் தகுதியை உறுதிப்படுத்தும் படிக்கு பரிசுத்த ஆவியானவர் கொரிந்தியர்களுக்கு அற்புத வரங்களை அளித்தார் (1 கொரிந்தியர் 9:1, 2; 12:4-11; 2 கொரிந்தியர் 12:12). "உறுதிப்பட்டு" என்பது ஜனங்களின் தீர்மானத்தையும் தங்கள் முடிவில் உறுதியாய் நிற்பதையும் நோக்கத்தில் உறுதியாய் நிற்பதையும் உறுதிப்படுத்தலாகக் குறிப்பிடலாம் (1 கொரிந்தியர் 1:8; 2 கொரிந்தியர் 1:21; எபிரெயர் 13:9).*

*கொலோசெயர்* ***விசுவாசத்தில் (அவர்கள்) போதிக்கப்பட்டபடியே*** *உறுதிப்படுத்தப்பட்டார்கள். "உங்கள் விசுவாசத்தில்," என்று சொல்லப்படாமல் கிரேக்க வசனப்பகுதியில் tē pistei என்று சொல்லப்படுகிறது 1:23ல் சொல்லப்படுவது போன்று அதன் பொருள்* (the) *அந்த விசுவாசத்தில், என்று சொல்லப்படுகிறது. "விசுவாசம்," என்று சொல்லப்படுவதால், பவுல் கிறிஸ்தவ உபதேசத்தின் முழுத்தொகுப்பையும், அதாவது கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கத் தக்கதாக வெளிப்படுத்தப்பட்ட முழு சத்தியத்தையும் உறுதிப்படுத்துவதை பொருள்படுத்தினார்.*

*"போதிக்கப்பட்ட" என்பது* (*didaskō*) *போதிப்பதற்கு அல்லது யாரோ ஒருவரை என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுவதற்கு பயன்படுத்தப்படும் வழக்கமான வழக்குச் சொல்லாகும் (மத்தேயு 4:23; 28:15). கொலோசெயர்கள் தேவனுடைய வசனத்திலிருந்து கற்றுக் கொண்ட போதனைகளில் நிலைத்திருக்கும்படி பவுல் விரும்பினார் (ரோமர் 10:17). அவர்கள்*

விசுவாசத்தில் உறுதிப்பட்டவர்களாய், தாங்கள் கேட்ட சத்தியத்தில் தங்கள் ஜீவியத்தைக் கட்டினவர்களாய், தொடர்ந்து கற்றுக் கொள்ள வேண்டும். அவர்கள் தங்கள் விசுவாசத்தில் உறுதிப்பட்டவர்களாயிருந்தால், கள்ளப் போதகர்களால் அவ்வளவு சுலபமாக சம்மதிக்க வைக்கப்படவோ அல்லது விரைவாக விசுவாசத்திலிருந்து வழுவிப்போகச்செய்யவோ முடியாது.

எப்பாப்பிரா அவர்களுக்கு முறையாகப் போதித்திருந்தார். அவர்கள் ஆவிக்குரிய வளர்ச்சியை அடைய, இந்தப் போதனைகளை விட்டு விலகுவதற்குப் பதிலாக, அவர்களுக்குப் போதித்திருந்த போதனைகளை விடாப்பிடியாக பற்றிக் கொண்டிருக்க வேண்டும். அவர்கள் சரியாகப் போதிக்கப்பட்டிருப்பார்கள் என்பதில் பவுலுக்கு சந்தேகமிருக்கவில்லை. அல்லது அவர்களுடைய வாழ்வு முறையைக்குறித்த கேள்வியும் இருந்ததில்லை. அவர்கள் தொடங்கின காரியத்தில் நிலைத்திருக்கும்படியும் இயேசுவால் கொடுக்கப்பட்ட மாதிரியின்படி தங்கள் வாழ்க்கையை காத்துக் கொள்ளவும் அவர் அவர்களை ஊக்கப்படுத்தினார்.

மனிதன் பிழைப்பதற்கு தேவனுடைய வசனம் தேவை (காண்க மத்தேயு 4:4). வேதவாக்கியங்களெல்லாம் தேவன் ஆவியினால் ஏவப்பட்டன என்றும் ஒருவரை கிறிஸ்தவராக்கப் போதிய சத்தியங்கள் அதில் இருக்கின்றன என்றும் "… தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்ய தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி" என்று பவுல் எழுதினார் (2 தீமோத்தேயு 3:16, 17). இதினால் தான் பவுல் வசனத்தைப் போதிக்கவும் பிரசங்கிக்கவும் தீமோத்தேயுவுக்கு அறிவுறுத்தினார் (1 தீமோத்தேயு 4:11; 6:2; 2 தீமோத்தேயு 2:2; 4:2). அதினால் வளர்ச்சி ஏற்படுகிறது என்று பேதுரு போதித்தார் (1 பேதுரு 2:2). வசனத்தை போதிப்பது கிறிஸ்தவ அடிப்படையாக இருந்து உறுதிப்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் ஆவிக்குரிய பெலத்தின் மூலக் கூறாக இருக்கிறது (எபிரெயர் 4:12).

பவுல் தனது வாசகர்களுக்கு ஒரு புதிய போதனையை அறிவிக்கவில்லை. அவர்கள் தங்களுக்குத் தேவையான சத்தியங்களைப் பெற்றுக் கொண்டார்கள். புதிய போதனைகளைத் தேடுவதைக் காட்டிலும், ஏற்கனவே பெற்றுள்ள போதனைகளில் கட்டப்பட வேண்டும். அவர்களுக்கு ஏற்கெனவே போதிக்கப்பட்டவைகளுடன் ஒத்துப்போகாத எந்த ஒரு புதிய போதனையும் அது கள்ள உபதேசமே (காண்க கலாத்தியர் 1:7, 8). இயேசுவால் வெளியாக்கப்பட்ட உபதேசங்களுக்குப் புறம்பே நாம் ஒரு புதிய உபதேசத்தைத் தேட வேண்டுவதில்லை; மாறாக, நாம் தேர்ச்சியை நோக்கி அவர் கொண்டு வந்த சத்தியத்தில் வளர வேண்டும் (எபிரெயர் 6:1).

### "ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருவீர்களாக" (2:7)

அவர்களுடைய விசுவாசத்தின் இலக்கும் அவர்களுடைய நம்பிக்கையும் நித்திய ஜீவனாயிருந்த படியால் அவர்களுடைய இருதயங்கள் **பெருக** (மகிழ்ந்து பொங்க) **வேண்டும்** (*perisseuō*). மறுபடியும், பவுல் நிகழ்கால வினையெச்சத்தைப் பயன்படுத்தியுள்ளார், அது தொடர் செயலைக் குறிக்கிறது. அவர் குறிப்பிட்டதன் பொருள் அவர்கள் ஸ்தோத்திரத்துடன் "மிக அதிகமாய்" அல்லது "பரிபூரணமாய்" தொடர்ந்து பெருக வேண்டும். அவர்களுடைய நன்றியறிதல் ஏற்கனவே மிக அதிகமாய்ப் பெருகியிருந்த

போதிலும், பவுல் கொலோசெயர்களை ஊக்கப்படுத்தி தேவனுக்கு அவர்கள் செலுத்தும் ஸ்தோத்திரத்தில் நன்றியதலோடு நிலைத்திருக்க ஊக்கப்படுத்தினார்.

பரலோகத்தை எதிர் நோக்கியிருப்பதோடு கூட, தேவனுடைய ஆசீர்வாதங்களை தங்களுடைய தேவ பக்தியுள்ள வாழ்க்கையினிமித்தம் பெற்றவைகளுக்கு நன்றியுள்ளவர்களாயிருக்க முடியும், பாவத்தின் குற்ற உணர்வுகளிலிருந்து விடுதலையையும், இயேசுவோடும் சக கிறிஸ்தவர்களோடும் கொண்டிருந்த ஐக்கியமும் பெற்றதற்கு நன்றியுள்ளவர்களாயிருக்க முடியும். அந்த ஆசீர்வாதங்கள் தங்கள் சுய சாதனைகளினாலே அல்ல இந்த நன்மைகள் தேவனிடத்திலிருந்து அவர்களுக்கு வந்தவை என்ற உணர்வு சகல ஆசீர்வாதங்களுக்கும் ஊற்றும் காரணமுமாயிருக்கிறவரை துதிகளால் போற்றி வழிபட நடத்தவேண்டும் (யாக்கோபு 1:17). கிறிஸ்துவின் மூலம் அவர்கள் அடைந்த நன்மைகள் மூலம் தாழ்மையுடன் ஸ்தோத்திரங்களால் இருதயங்கள் நிரப்பப்பட வேண்டும்.

நன்றியுணர்வு திருப்தியைப் பிறப்பிக்கும், அதினால் நிலையான செல்வாக்கை அளிக்கிறது. தங்களிடத்திலுள்ளவைகளுக்காக மகிழ்வடைந்து அதை அநுபவிப்பவர்கள் அதைப் பற்றிக் கொண்டிருப்பதில் ஏறத்தாழ உறுதியாயிருப்பார்கள். வேறொருவரும் செய்யக் கூடாத அளவுக்கு இயேசு இருதயங்களைத் திருப்தியாக்கி நிறைக்கிறவராயிருக்கிறார் (யோவான் 4:14). கொலோசெயர்களுக்கு அவர்களுடைய ஆவிக்குரிய தேவைகளை அளிக்கவும் நன்றியுள்ள இருதயத்தால் நிரப்பவும் வேறு ஒருவரும் அவசியமில்லாதிருந்து.

இந்தப் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள சவால் தெளிவாயிருக்கிறது: கொலோசெயிலிருந்த கிறிஸ்தவர்களின் தொடர் வளர்ச்சியை பவுல் விரும்பினார். R. C. Lucas பின்வருமாறு சுருக்கப்படுத்தி எழுதுகிறார்:

> முப்பகுதியால் முன்னிலைப்படுத்தும் இப்பகுதி பவுலுக்கு மனநிறைவைக் கொடுக்கவில்லை. தமது வாசகர்களை முற்றிலும் மாறுபாடற்ற நிலைக்கு அவர் அழைப்புக் கொடுக்கிறார், கூடவே ஆவிக்குரிய நிறைவு நிலை, அறிவைப்பற்றிக் கொள்ளவும் அறைகூவல் விடுக்கிறார். ஆகிலும் எப்பொழுதுமே இரட்சிக்கிற சுவிசேஷத்தின் பரவுதலுக்கான ஒற்றுமைக்கான உண்மையான வளர்ச்சியாக அது இருக்கட்டும்.[10]

## பயன்பாடு

### ஞானம் அறிவு ஆகியவைகளின் ஊற்றுக்காரணர், கிறிஸ்து

நாம் நமது வாழ்க்கையை அவர் மீது கட்டும்படிக்கு பவுல் கிறிஸ்துவின் பலம் மற்றும் அதிகாரத்தை முக்கியப்படுத்தி முன் வைக்கிறார். பவுலின் முன்மாதிரியை நாமும் பின்பற்றி ஜனங்கள் இயேசுவை உண்மையாய்ப் பின்பற்றச் செய்ய ஏதுவாக போதிப்பதில் அக்கரை காட்ட வேண்டும்.

பவுலைப்போல, நாமும் ஜனங்களுடைய வாழ்க்கையிலே இயேசு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர் என்ற உணர்வடைய வைக்க முயற்சிக்க வேண்டும். அதாவது நமது பிரயாசங்கள் அனைத்தும் பவுலை ஒத்த அதே திசையில் செல்லும் என்று இது அர்த்தப்படுகிறது. கிறிஸ்தவர்கள் பின்வரும்

காரியங்களைக் கொண்டிருக்கும் படி அவர் போராடினார்:

*(1) ஊக்கமளிக்கப்பட்ட இருதயங்கள்.* ஒப்புக்கொடுத்த கிறிஸ்தவர்கள் என்போர் தங்களுடைய செயலூக்கம் கொண்ட இருதயங்களில் விசுவாசம் முன்னேற்றமடைவதும் அதிலிருந்து வெளிவரும் காரியங்களும் அவர்களின் இருதயங்கள் எழுப்புதலைக் கொடுக்கும். யோவானின் பிரயாசத்தினால் அந்த கிறிஸ்தவர்கள் சத்தியத்தில் நடந்து கொள்ளுகிறார்கள் என்று அவர் அறிந்த போது சந்தோஷத்தால் நிரப்பப்பட்டார் (3 யோவான் 4).

சூழ்நிலை கடினமாகி எல்லாமே தவறிப் போகும் போது, இருதயம் சோர்வடைவது இயல்பே. ஆர்வத்துடன் நிலைத்திருக்க, நாம் நமது இலக்குகளின் மேல் நமது கண்ணை வைத்து, நமது அனைத்துப் பிரயாசங்களும் முடிவிலே ஆசீர்வாதம் பெறும் என்று உணர வேண்டும். நாம் இயேசுவுக்கு தொடர்ந்து ஊழியஞ்செய்ய வேண்டும், ஏனெனில் "கர்த்தருக்குள் நாம் படுகிற பிரயாசம் விருதாவாயிராது" என்று அறிந்து கொண்டிக்கிறோம். என்று பவுல் எழுதினார் (1 கொரிந்தியர் 15:58).

உபத்திரவங்கள் வரும்போது, நாம் ஊக்கத்தை இழப்பதற்குப் பதிலாக, நாம் உற்சாகப்படுத்தப்பட வேண்டும் ஏனெனில் நாம் அவைகளிலிருந்து பெறும் பயன்களினால் அப்படிச் செய்ய வேண்டும்: விடாமுயற்சி, நடத்தை, மற்றும் நீதி ஆகியவற்றில் வளர்ச்சி (ரோமர் 5:3, 4; யாக்கோபு 1:2; எபிரெயர் 12:11). சோதனைகள் என்பவை தேவன் நம்மிடத்தில் அன்புகாட்டுவதை பொருள்படுத்துகிறது என்பதையும் அவர் நம்முடைய வாழ்க்கையிலே கிரியை செய்து நம்மை உருவாக்கி தமது பயன்பாட்டிற்கென சிறந்த கருவிகளாக்குகிறார் என்பதையும் காட்டுகிறது. "கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்" (எபிரெயர் 12:6).

பவுலுக்கு நேரிட்ட அனைத்து போராட்டங்கள், கஷ்டங்கள், மற்றும் உபத்திரவங்கள் யாவற்றினூடே, அவர் தமது இருதயத்தைத் தளர விடவில்லை (2 கொரிந்தியர் 4:1). பவுல் தனது பாடுகளின் மத்தியில் கொடுத்த நிச்சயத்தின் மூலம் மிகுந்த ஊக்கமளித்தலை நாம் பெற்றுக் கொள்ளக் கூடும்: "ஆதலால் இக்காலத்துபாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகளல்ல வென்று எண்ணுகிறேன்" (ரோமர் 8:18). நமக்கு அளிக்கப்பட்டுள்ள வாக்குத்தத்த மகிமையில் நாம் மாற்றம் பொறுவோம் என்பதுதான் (1 கொரிந்தியர் 15:51, 52). அது உயிர்த்தெழுதலில் தேவனுடைய சாயலாக மாறுவோம் (பிலிப்பியர் 3:21; 1 யோவான் 3:2). அவ்வேளையில், நாம் இயேசுவை சேவிக்க இவ்வுலகில் நம்முடைய அனைத்து பிரயாசங்களும் பிரயோஜனமானதாயிருந்ததை அறிவோம். பவுல், "நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம்" (கலாத்தியர் 6:9) என்று எழுதினார்.

*(2) அன்பினால் ஏற்படும் அண்மை.* கிறிஸ்தவர்களாகிய நாம், ஆவிக்குரிய நெருக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும். பொதுவான அன்பின் கட்டு நம்மை ஒன்றிணைக்கிறது. பவுல் கிறிஸ்தவர்களின் அண்மையை "பிணைக்கப்பட்டிருத்தல்" என்ற வார்த்தையை பயன்படுத்திப் பேசினார். அதேபோல ஒரு துண்டு துணி நூலிழைகளால் பிணைக்கப்பட்டு இருப்பதால் ஒன்றாக (ஒரே துணியாக) இருக்கிறது, கிறிஸ்தவர்கள் அன்பினால்

பிணைக்கப்பட்டிருக்கவேண்டும். ஒரு தனி நூலிழை தனியாய்த் தொங்கிக் கொண்டிருப்பது போல, தனி நபராக இருகக்கக் கூடியவர்களல்ல, மாறாக நாம் கிறிஸ்தவ ஐக்கியம் எனும் நூல்களால் பின்னப்பட்டிருக்கிறோம். அன்பு தனித்திருப்பவர்களை கிறிஸ்தவ குடும்பத்தில் ஒரு அங்கமாயிருக்கத் தக்க வகையில் உதவி செய்யும் தன்மை அன்புக்கு உண்டு.

கிறிஸ்தவனின் உச்சக்கட்ட நடத்தை அன்பு. அன்புகட்டளையிடப்பட்டது (யோவான் 13:34). அனைத்து ஒழுக்கங்களிலும் மிகப் பெரிய ஒழுக்கமாக அன்பு விவரிக்கப்படுகிறது (1 கொரிந்தியர் 13:13). தேவன் அன்பாயிருக்கிறார். நாம் அவரைப் போல் இருக்க வேண்டுமானால் நாம் அன்பைக் கொண்டிருப்போம். நாம் அன்பில்லாதவர்களாயிருந்தால், தேவனை அறியமாட்டோமே, ஏனெனில் தேவன் அன்பாகவே இருக்கிறார் (1 யோவான் 4:8).

*(3) அறிந்து கொள்வதினால் உண்டாகும் ஐசுவரியத்தின் நிச்சயம்.* அறிந்து கொள்ளுதலினால் சரீரப்பிரகாரமான ஐசுவரியம் வருவதாக பவுல் சொல்லவில்லை. அப்படிப்பட்ட ஐசுவரியங்களைத்தான் பெரும்பான்மையான உலகத்தார் விரும்புகிறார்கள். பணத்திற்காக ஜனங்கள் தங்கள் ஆத்துமாக்களை விற்றுப்போட்டு பல விதமான சோதனையிலும் கண்ணியிலும் விழுந்து, “மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள்” (1 தீமோத்தேயு 6:9). பண ஆசையினால் எண்ணற்ற ஜனங்கள் அழிந்து போயிருக்கிறார்கள்.

கிறிஸ்தவர்களாகிய நாம் பெற்றிருக்க வேண்டிய ஐசுவரியமெல்லாம் இயேசுவே அளிக்கிறார் என்ற புரிந்து கொள்ளுதலின் அடிப்படையில் வருகிறது. மோசே மெய்யான ஐசுவரியத்தை புரிந்து கொண்டிருந்தான். அவன், “இனிவரும் பலன் மேல் நோக்கமாயிருந்து, எகிப்தின் பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிகப் பாக்கியமென்று எண்ணினான்” (எபிரெயர் 11:26). சாலொமோன் எழுதியதாவது, “தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுத்தலுக்கு வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம்” (நீதிமொழிகள் 22:4).

ஐசுவரியத்தினால் வரும் பிரச்சனையை சாலொமோன் உள்நோக்கிப் பார்த்து புரிந்து கொள்ளும் திராணியைப் பெற்றிருந்தார். அவர், “பணப்பிரியன் பயணத்தினால் திருப்தியடைவதில்லை; செல்வப்பிரியன் செல்வப்பெருக்கினால் திருப்தியடைவதில்லை” என்று எழுதினார் (பிரசங்கி 5:10) ஞானம் அறிவு என்பவைகளின் கனி, “பொன்னையும் தங்கத்தையும் பார்க்கிலும் என் பலன் நல்லது; சுத்த வெள்ளியைப் பார்க்கிலும் என் வருமானம் நல்லது” (நீதிமொழிகள் 8:19). ஐசுவரியத்தை தேடுகிறவர்களுக்கு அவர் ஒரு அறிவுரையையும் வழங்கினார்:

> ஐசுவரியவானாக வேண்டுமென்று பிரயாசப்படாதே; சுயபுத்தியைச் சாராதே. இல்லாமற்போகும் பொருள் மேல் உன் கண்களை பறக்க விடுவானேன்? அது கழுகைப் போலச் சிறகுகளைத் தனக்கு உண்டு பண்ணிக்கொண்டு, ஆகாயமார்க்கமாய்ப் பறந்துபோம் (நீதிமொழிகள் 23:4, 5).

சரியான விருப்பம் என்பது ஏழ்மையுமல்ல ஐசுவரியமுமல்ல. இரண்டிலொன்று ஒரு நபரை கர்த்தரிடமிருந்து திருப்பக் கூடும் (நீதிமொழிகள்

*30:8, 9). மாறாக நாம் கிறிஸ்து மூலம் வருகிற ஆவிக்குரிய ஐசுவரியத்தையே விரும்ப வேண்டும்.*

*(4) ஞானமும் அறிவும் கிறிஸ்துவிடம் இருக்கிறது.* தேவனுடைய ஞானமும் அறிவும் கிறிஸ்து மூலமாக மட்டுமே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது தேவன் உலகப்பிரகாரமான ஞானத்தின் மூலமாக அறியப்படுவதில்லை என்று பவுல் எழுதினார் (1 கொரிந்தியர் 1:21). இயேசுவையும் அவருடைய போதனைகளையும் அறிந்து கொள்வதுதான் உண்மையான அறிவு. அப்போஸ்தலனாகிய பவுலைப் போல, நம்முடைய அக்கரையும் கூட, ஜனங்களை கிறிஸ்துவுக்குள் காணப்படும் "ஞானம் அறிவாகிய ஐசுவரியத்திற்கு" கொண்டு வரவேண்டும்.

*(5) கிறிஸ்துவுக்கு உண்மையாயிருத்தல்.* கிறிஸ்துவுக்குள் இருக்கும் பொக்கிஷத்தினால், நாம் அவரிடத்தில் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். மேலும் மனுஷருடைய உபதேசத்துக்கும் ஞானத்துக்கும் கொண்டு செல்லப்பட்டுவிடக் கூடாது. ஞானம் அறிவு ஆகியவை கிறிஸ்துவுக்குள் இருப்பதாக பவுல் கொலோசெயரிடம் சொல்லுவதற்கான காரணம் அவர்கள் இயேசுவை நோக்கிப் பார்க்கும்படி ஊக்கப்படுத்துதற்காகத் தானேயொழிய மனுஷ ஞானத்தையல்ல.

ஆவிக்குரிய ரீதியில் நமக்குத் தேவையான அனைத்தும் கிறிஸ்துவிலே காணப்படுகிறது. சகல ஞானமும் அறிந்து கொள்ளுதலும் அவருக்குள் காணப்படுகிறது. அவருக்குள் நாம் கட்டப்படவும் அவரில் நாம் தொடர்ந்து நிலைத்திருக்கவும் வேண்டும், அவரைவிட்டு நாம் விலகி விடக் கூடாது. நாம் உண்மையாகவே அவரில் ஒரு பாகமாக மாறுவோமாகில், எந்த உலக சக்திகளோ போதனையோ அவருடன் நமக்கு இருக்கிற உறவுமுறையை பிரிக்க மாட்டாது.

### விசுவாசத்தில் வளருதல் (2:1-5)

இயேசுவுக்குள் மாபெரும் பொக்கிஷங்களெல்லாம் இருக்கிறது. நாம் அவருக்குள் பலப்படவும் அவரோடு நமக்கிருக்கிற நெருங்கிய உறவுமுறையினால் அவர் அளிக்கும் பலன்களை நாம் அநுபவிப்பதுமே நமது இலக்காக இருக்க வேண்டும். உலகப்பிரகாரமான கொள்கைகள் இயேசுவில் காணப்படும் ஆசீர்வாதங்களுக்கு ஒப்பாக எதையுமே அளிக்க இயலாது.

பவுல் பிறர் நலம் நாடினார் (வசனங்கள் 1, 5). சகோதரர்களை தனித்துவ ஆவிக்குரிய காரியங்களிலும் கொள்கையில் தூய்மையையும் கொண்ட கிறிஸ்துவுக்குள் தேறினவர்களாக முன்னிறுத்த அவர் முயற்சித்தார்.

சபையிலுள்ள ஒவ்வொரு முன்னோடியும் ஆவிக்குரிய வளர்ச்சியை விரும்ப வேண்டும், அது கிறிஸ்துவைப் பின்பற்றுவோருக்கு பலன் அளிக்கும். சபையின் முன்னோடிகள் (மூப்பர்) அதின் அங்கத்தினர்களை "தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகிய, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்படி" வளர்ச்சிபெறச் செய்ய வேண்டுமென்று போதித்தார் (எபேசியர் 4:13).

பையன்கள் வழக்கமாக உயரமாக வளர விரும்புவார்கள். தாங்கள் வளர்ந்திருக்கிறார்களா என காண சிலவேளைகளில் தங்களை

*அளவெடுக்கும்படி தங்கள் பெற்றோரிடம் செல்வார்கள். ஒரு பையன் தனது குட்டையாக இருக்கும் சகோதர சகோதரிகளுக்கு முன்பாக பெருமையுடன் நின்று தனது அதிகப்படியான உயரத்தைக் காட்டுவான். இன்னொருவன் தனது உயரமான நண்பனுக்கு அருகில் நின்று அந்த நபருக்குச் சமமான உயரத்தை தான் அடைய இன்னும் எவ்வளவு உயரம் வளர வேண்டும் என ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வான்.*

*முன்னோடிகள் (மூப்பர்கள்) கிறிஸ்தவர்களுக்கு ஊக்கமளித்து தங்களை மற்றவர்களுடன் ஒப்பிட்டு தங்களுக்குள்ள உயர்வான திறமைகளைக் குறித்து பெருமையடிக்காதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். சகோதரர்கள் தங்களை இயேசுவோடு அளந்து பார்த்து அவருடைய அமைப்புக்கு ஏற்றபடி வளரவேண்டும்.*

*பவுலுடைய எண்ணமெல்லாம் கிறிஸ்தவர்களின் வளர்ச்சியில் உதவி செய்வதில் தன்னையே பலியாக ஒப்புக்கொடுக்கவும் சந்தோஷப்பட்டார் (பிலிப்பியர் 2:17). கிறிஸ்தவ முன்னோடிகள் தங்கள் உள்ளூர் சபைக்காக தங்களையே கொடுக்கவும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.*

*பவுல் பிணைக்கப்பட்ட அன்பையும் ஆவிக்குரிய அறிவையும் விரும்பினார் (வசனம் 2). சகோதரர்களை ஒன்றிணைக்கத்தக்க கிறிஸ்தவ சமுதாயத்துக்குள் அன்பைப் பெருகப் பண்ணுவது அவருடைய பிரதான இலக்காக இருந்தது. அன்பு என்பது "பிடித்துக்கொள்வதும்" போதிக்கப்படுவதுமாகும். அப்போஸ்தலர்கள் இயேசுவோடு கொண்டிருந்த தொடர்பிலே அன்பைக் கற்றுக் கொண்டார்கள் (யோவான் 13:34). பவுல் தன் சக கிறிஸ்தவர்களிடம் நேர்மையாக அன்பு செலுத்தினார் (1 கொரிந்தியர் 10:14; 15:58; 16:24; 2 கொரிந்தியர் 2:4). பவுலிடமிருந்து அன்பைக் கற்றுக் கொள்ள சீஷர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது, அதை அவர் கிறிஸ்துவைப் பின்பற்றுவதுபோல அவரைப் பின்பற்றியதால் கற்றுக்கொண்டனர் (1 கொரிந்தியர் 11:1). ஒருவருக்கொருவர் பரஸ்பரம் கொண்டிருக்க வேண்டிய அன்புக்கு தாவீதிடத்தில் யோனத்தான் கொண்டிருந்த அன்பு தன்னையே பலியாக ஒப்புக்கொடுக்கவும் மனவிருப்பம் உள்ளவனாக இருந்தான் என்பது ஒரு முன் உதாரணமாகும்.*

*இயேசுவிடமிருந்து கற்றுக் கொள்ள மிகுந்த நேரத்தை செலவிட வேண்டியது அவசியம். அவரே உண்மையான ஞானத்திற்கும் அறிவுக்கும் மூலகாரணி (வசனங்கள் 3, 4).*

### ***இயேசுவை மட்டும் நோக்கிப் பார்த்தல் (2:6, 7)***

*கிறிஸ்தவர்கள் இயேசுவில் மட்டுமே நடக்க வேண்டும் (வசனம் 6). ஏனெனில் அவரே பிதாவினிடத்தில் செல்ல ஏதுவான ஒரே வழியாக இருக்கிறார் (யோவான் 14:6; நடபடிகள் 4:12). அவருக்குள் நடத்தல் என்பது அவர் கொடுத்த முன்மாதிரியைப் பின்பற்றிச் செல்லுதல் (1 யோவான் 2:6). கிறிஸ்தவர்களாகிய நமக்கு நம்முடைய வாழ்க்கையை இயேசுவின் வாழ்க்கை முறைக்கு ஒப்பாக கட்டுப்பாட்டுடன் வைத்துக் கொள்வதே நம்முடைய இலக்காக இருக்க வேண்டும். வேறு வழியாக வாழ்பவர்கள் இயேசுவுக்குள் நடப்பதில்லை.*

*நாம் இயேசுவிலே உறுதியாக வேர்கொண்டிருக்க வேண்டும்*

*(வசனம் 6). ஒரு மரம் கடுமையான காற்று வீசும் காலத்திலும் உறுதியாய் நிற்க வேண்டுமானால் அது மிகவும் வலிமையாக, ஆழமாக அதன் வேர் கொண்டிருக்க வேண்டும். கர்த்தருடைய வசனத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்ட மரத்திற்கு ஒப்பாயிருக்கின்றான் என்று தாவீது போதித்தார் (சங்கீதம் 1:3). நாம் இயேசுவிடமிருந்து ஒழுக்க ரீதியாகவோ, உபதேச ரீதியாகவோ, அல்லது நமது வாழ்க்கையின் வேறு எந்த செயலிலுமோ பிரிக்கப்பட்டுவிடாத படி நாம் அவரோடே பின்னப்பட்டவர்களாயிருக்க வேண்டும் (1 கொரிந்தியர் 15:58). உலகத்தின் வாயிலாக, சாத்தான், கிறிஸ்தவர்களை பின்னுக்கு இழுத்து இயேசுவோடிருக்கிற உறுதிப்பட்ட உறவுமுறையிலிருந்து அப்புறப்படுத்த தொடர்ந்து வகை தேடுகிறான் (1 பேதுரு 5:8). யோவான் கிறிஸ்துவைப் பின்பற்றி வந்தவர்களுக்கு அறிவுறுத்தி உலகத்திலும் அதிலுள்ளவைகளிலும் அன்புகூராதிருக்கும்படி சொன்னார் (1 யோவான் 2:15-17).*

---

குறிப்புகள்

[1]*உதாரணமாக காண்க நடபடிகள் 20:31; 2 கொரிந்தியர் 2:4; கலாத்தியர் 4:19; பிலிப்பியர் 1:18; 1 தெசலோனிக்கேயர் 2:8.* [2]*சில மூலப் பிரதிகளில் "மற்றும் ஹைரோபோலியிலும்" என்று சேர்க்கப்பட்டுள்ளது.* [3]*இதே போன்ற கிரேக்க வார்த்தை பிலிப்பியர் 1:30; 1 தெசலோனிக்கேயர் 2:2; 1 தீமோத்தேயு 6:12; 2 தீமோத்தேயு 4:7; மற்றும் எபிரெயர் 12:1ல் காணப்படுகிறது.* [4]*1 சாமுவேல் 16:7; 1 இராஜாக்கள் 8:39; லூக்கா 16:15; நடபடிகள் 1:24; ரோமர் 8:27; வெளிப்படுத்தின விசேஷம் 2:23.* [5]Robert G. Bratcher and Eugene A. Nida, *A Translators Handbook on Paul's Letters to the Colossians and to Philemon,* Helps for Translators (New York: United Bible Societies, 1977), 46. [6]H. C. G. Moule, *The Epistles to the Colossians and to Philemon,* The Cambridge Bible for Schools and Colleges (Cambridge: University Press, 1893; reprint, 1902), 97. [7]Bratcher and Nida, 48. [8]*காண்க 1 கொரிந்தியர் 11:23; 15:1, 3; கலாத்தியர் 1:9, 12; பிலிப்பியர் 4:9; 1 தெசலோனிக்கேயர் 2:13; 4:1; 2 தெசலோனிக்கேயர் 3:6.* [9]A. T. Robertson, *Paul and the Intellectuals: The Epistle to the Colossians,* rev. and ed. W. C. Strickland (Nashville: Broadman Press, 1959), 76. [10]R. C. Lucas, *The Message of Colossians and Philemon: Fullness and Freedom,* The Bible Speaks Today (Downers Grove, Ill.: InterVarsity Press, 1980), 93.